www.tamilarangam.net

# பெண்கள் செய்தி மடல்

## சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

மடல் - 4 : 3 புரட்டாதி 2002

பொருளடக்கம்


- எமதுநலம் எமதுரிமை
- பெண்களுடனான கலந்துரையாடல்
- ஆடவரே கேளீர்
- கிழக்கு மாகாண சிறுவர்களின் பிரச்சினை
- துரதிஷ்டவசமான
- கல்வி விழிப்புணர்வூட்டல் கருத்தரங்கு
- பயிற்சிப் பட்டறை
- முதற் பிறை


**எத்தனை தடைகள்
எத்தனை இடர்கள்
தோன்றிய போதும்
உறுதிப் பாதையில்
பயணிக்கும் பெண்களின்
பதிவுகள்
செய்திமடலாய் - தொடர்ந்து
உங்கள் முன்
மலர்ந்து கொண்டே இருக்கும்** *ஆசிரியை*

## எமது நலம் எமது உரிமை

பெண்களுக்கான கட்டுப்பாடுகள் இன்றுவரை முற்றுமுழுதாக விலகுவதாக இல்லை. முக்கியமாக பெண்களின் மேல் விதிக்கப்படும் பால்நிலை அப்படையிலான கட்டுப்பாடுகள் பெண்களின் பால் உறுப்புக்களை, குழந்தை பெறும் இயல்பை அடிப்படையாக வைத்தே விதிக்கப் படுகின்றன. ஆனால் பெண்கள் தங்கள் பால் உறுப்புக் கள், இனப்பெருக்கம், கருத்தடை, அவற்றின் நலன், பாதிப்பு, சுகாதாரம், உரிமை பற்றி யோசிப்பதுமில்லை தெரிந்து வைத்திருப்பதுமில்லை. இது பெண்களின் ஆயுட் காலத்தை குறைப்பதுடன் அவர்கள் வாழும் காலத்தை நோயாளி யாக ஆக்கிவிடுகிறது.

அண்மையில் 22.08.2002 அன்று எமது நிலையத்தில் சூரியா அலுவலகர்களுக்கும், கலாசார குழு உறுப்பினர்களுக்கும் "பெண்களின் இனப்பெருக்க உடல் நலன்" எனும் தலைப்பில் பயிற்சிப் பட்டறை ஒன்றை எமது அலுவலகச் சகோதரி வாசுகி ஜெயசங்கர் நடத்தினார். இவ்வகுப்பில் பின்வரும் விடயங்கள் பற்றி விளக்கமளிக் கப்பட்டது.

1. உடல் அமைப்பு
2. உடல் உறுப்புக்களின் தொழிற்பாடுகள்
3. இனப்பெருக்கம்
4. கருத்தடை முறைகள்

**பெண்களின் கவனத்திற்கு**

- உங்களுடைய உடல் பற்றிய அக்கறை உங்களுக்கு மட்டுமே உரியது.
- உங்களுடைய உடல் மீதான உரிமையும் உங்களுக்கு மட்டுமே உரியது.
- உங்கள் உடல் பற்றிய தீர்மானங்களை ஏனையோர் எடுப்பதற்கு அனுமதிக்க வேண்டாம்.
  உ+ம் (அரசு, உறவினர், கணவன், அழகுசாதன நிறுவனங்கள், வைத்தியர்கள்)
- உங்களுடைய உடலின் ஒவ்வொரு பகுதி பற்றியும் அதன் மாற்றங்கள் பற்றியும் அவதானியுங்கள்.
- வெவ்வேறு உணவு, காலநிலை, சூழல் மாற்றங் களுக்கு ஏற்ப உங்கள் உடல்களில் மாற்றங்கள் தோன்றுவதை நீங்களாகவே அனுபவ மூலம் அறியலாம். இந்த மாற்றங்கள் நோய்கள் அல்ல. உடல் உபாதைகள் எல்லாமே நோய்கள் அல்ல. உங்களுக்கு எவ்வகையான மருத்துவ உதவி தேவை என்பதைத் தீர்மானிக்கும் முழு உரிமையும் உங்களுடையதே.
- மருத்துவ உதவியின் சாதக பாதகங்களைக் கேட்டு அறியும் உரிமை உங்களுக்கு உள்ளது. இவற்றைக் கேட்டு அறிந்த பின்னரே மருத்துவ சிகிச்சைக்கு உட்படுங்கள்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்களுடனான கலந்துரையாடல்

போர்ச்சூழலில் பாதிப்புற்றிருந்த மக்களையும், அவர்கள் அநுபவங்களையும், இவர்களுக்கென சேவையாற்றும் நிறுவனங்களையும் சந்திப்பதற்கு அண்மையில் மட்டக் களப்பு பகுதிக்கு சமூக விஞ்ஞானிகள் கழக நிறுவனத் தின் ஒழுங்குபடுத்தலில் எமது சூரியா நிலையத்தின் அனுசரனையுடன் தெற்கு, மேற்கைச் சேர்ந்த பெண்கள் நிறுவனங்களின் சகோதரிகள் வந்திருந்தனர்.

அதனைத்தொடர்ந்து எமது “சூரியா” நிலையச் சகோதரிகள் இப்பெண்கள் நிறுவனங்களையும், அவ்வூர் மக்கள் வாழ்க்கை முறைகளையும், அங்குள்ள மக்களின் தொழில் முறைகளையும் பார்வையிடவும் சமாதான சூழலின் அவசியத்தை பரஸ்பரம் பகிர்ந்துகொள்ளும் பொருட்டும் 23.08.2002 - 27.08.2002 காலப்பகுதியில் நாட் டின் சில பாகங்களுக்கு சென்றிருந்தனர்.

இந்த அடிப்படையில் அடக்கப்பட்டு மறைக்கப் பட்டு சிறுத்துப்போகாமல் இயற்கையானவள் அப்படியே வாழும் பச்சை உலகமான நுவரெலியாவிற்கு செல்லும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

தமிழ், சிங்கள கிராமிய பெண்கள் நிறுவன அலுவலகத்தில் வேலைசெய்யும் சகோதரியின் வீட்டில் தங்கியிருந்த நான் அவருடன் சேர்ந்து சாந்திபுரத்தில் அமைந்துள்ள அவரது நிறுவனத்தை பார்வையிட சென்றிருந்தேன்.

இந்நிறுவனம் பல இடங்களில் ஆண், பெண் இணைந்த மக்கள் குழுக்களை அமைத்துள்ளது. இக் குழுக்கள் சங்கமாக இயங்குகின்றனர். இக்குழுக்களுக்கு சுகாதார பயிற்சி வகுப்புக்கள், சுற்றுச் சூழல் பற்றிய பயிற்சி வகுப்புக்கள், விழிப்புணர்வு பயிற்சி வகுப்புக்கள், பால் நிலை பயிற்சி வகுப்புக்கள் போன்ற பயிற்சி வகுப்புக் கள் நடத்துகின்றனர். இவர்களுக்கு மாடு வளர்ப்பிற் கெனவும், பயிர்ச்செய்கைக்கெனவும் கடன் வழங்குகின் றனர். இவர்கள் திரும்பச் செலுத்தும் இக்கடனுக்கான வட்டிப் பணத்தில் சம்பளம் கொடுத்து சில வெளிக்கள உத்தியோகத்தர்களை இவர்களுடன் வேலை செய்வதற்கு நியமித்துள்ளனர். இந்நிறுவனத்தில் 12 பேர் அடங்கிய வீதி நாடகக்குழு ஒன்று உள்ளது. இவர்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் இப்பிரதேசத்தின் வீதிகளில் நாடகம் செய்கின்றனர். வறுமை, சமாதானம், குடும்பப் பிரச்சினை, சேமிப்பின் அவசியம் போன்ற கருப்பொருட் களை கொண்டதாகவும் இவர்கள் நாடகங்கள் அமை கின்றன.

மற்றும் “மலையக ஒளி” எனும் பத்திரிகை ஒன்றை விஷேட தினங்களை (உ+ம் சர்வதே பெண்கள் தின நிகழ்வுகள்) தொகுப்பாக கொண்ட சஞ்சிகையாக வருடம் ஒரு வெளியீடாக வெளியிடுகின்றனர்.



அடுத்து தலவாக்கலையில் நடைபெற்ற கண் காட்சி ஒன்றை பார்வையிட சென்றோம். பிந்துனுவெவ அனர்த்தத்தால் கோபமுற்ற தமிழ் மக்களின் சீற்றத்தால் எரிந்தது, உடைந்தது சிங்களக் கிராமம் ஒன்று. அங்கே நெடுங்காலமாய் உறவாடியிருந்த தமிழ் சிங்கள சகோ தரங்களிடையே விரிசல் ஏற்படுவதை விரும்பாத தமிழ், சிங்கள கிராமிய பெண்களின் சம்மேளனம் இக்கிராம மக்களை ஒன்றிணைத்து சங்கம் ஒன்றை உருவாக்கியது. அவ்வாறு உருவாக்கப்பட்ட இக்கிராமச்சங்க மக்களின் கை வேலைப் பொருட்கள் இங்கு கண்காட்சிக்கும், விற் பனைக்கும் வைக்கப்பட்டிருந்தது.

“சமயில்” எஸ்டேட் - தோட்ட மக்களின் சங்கத்தை சந்திக்கச் சென்றோம். அது திங்கட்கிழமை வேலை நாளாயிருந்தபடியால் சங்க அங்கத்தவர்கள் தேயிலைத் தோட்டத்திற்கு வேலைக்கு சென்றிருந்தனர். இச்சங்க மக்களுக்கு சிங்கள, தமிழ் கிராமிய பெண்கள் சம்மேள னம் மாடுவளர்ப்பிற்கெனவும் மரக்கறித்தோட்டம் செய் வதற்கெனவும் வட்டியுடனான கடன் வழங்கி உள்ளனர். நாம் அங்கு சென்றிருந்தபோது அத்தோட்டத்தைச் சேர்ந்த ஆண் ஒருவர் தனது வீட்டை சிறிது பெருப்பித்துக் கட்டிக் கொண்டிருந்தார். இவர் மனைவி தற்போது வெளி நாட் டிற்கு பணிப்பெண்ணாகச் சென்றிருப்பதனால் மனைவி அனுப்பும் பணத்தை சேமித்து வீட்டை வசதிப்படுத்தக் கூடிய நிலமை ஏற்பட்டுள்ளது என்றார்.

இத்தோட்டத்தை சேர்ந்த மாணவர்கள் அருகில் இருக்கும் பாடசாலைக்குச் செல்கின்றனர். பாடசாலை முடிந்ததும் மேலதிக வகுப்புக்கள் இவர்களுக்கு இருப் பதில்லை. கல்வி வசதிகள் போதாது என்றே இங்கு பலரும் கூறுகின்றனர்.

www.tamilarangam.net

அடுத்து "பிரதீபா" சங்கத்தை பார்வையிட சென்றோம். இச்சங்கம் 4 குழுக்களை கொண்டு அமைந்துள்ளது. ஒவ்வொரு குழுவிலும் 5 அங்கத்தவர்கள் உள்ளனர். இவர்கள் "நவ ஜீவன சேமிப்பு" எனும் சேமிப்புத் திட்டத்தை கைக்கொள்கின்றனர்.

இங்கு கல்வி வசதி, எஸ்டேட் தோட்ட தொழிலாளர்களின் அடிப்படை வசதிகளில் அரச / தனியார் சேவை நிறுவனங்கள் மேலும் கவனம் செலுத்த வேண்டும். இனப்பிரச்சினை என்பது தங்களுக்கு இங்கு தெரிவதில்லை என்றும் அது சார்ந்து தங்களிடையே மனக்கசப்புக்களோ பிளவுகளோ ஏற்படுவதில்லை என்று மகிழ்ச்சியுடன் இவர்கள் கூறிக்கொண்டார்கள். நித்தமும் வெடிச்சத்தங்களிலும், அடையாளமற்ற மனிதர்களின் மனித வேட்டைகளிலும், இரவில் கேட்கும் காலடிச் சத்தங்களிலும் உறைந்து கிடந்த வடக்கு, கிழக்கு மக்களுக்கு இப்படியான மக்களை காண்பது மகிழ்ச்சியை தரும்தானே.

*விஜயலட்சுமி சேகர்*

## கிழக்கு மாகாண சிறுவர்களின் பிரச்சினையை இனம்காணல்



"கிழக்கு மாகாண சிறுவர்களின் பிரச்சினைகளை இனம் காணல்" எனும் தலைப்பிலான பயிற்சி வகுப்பு "சிறுவர் பாதுகாப்பு - நோர்வே" நிறுவனத்தினால் நடாத்தப்பட்டது. இப்பயிற்சி வகுப்பு மன்றேசா தியான இல்லத்தில் 14.05.2002- 16.05.2002 காலப்பகுதியில் இடம்பெற்றது.

இப்பயிற்சி நெறியில் ஆசிரியர்கள், கிராம சேவகர்கள், சமுர்த்தி உத்தியோகஸ்தர்கள், போரதீவுப் பற்று பிரதேச அபிவிருத்தி புணர்வாழ்வு கழக உறுப்பினர்கள், சூரியா நிலைய யாத்ரா குழு உறுப்பினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறுவர்களில் ஆறு பருவங்களில் அவர்களுக்கு ஏற்படும் உடல், உள அபிவிருத்தியும், அவர்கள் அபிவிருத்தியில் குடும்பம், பாடசாலை, நண்பர்கள், மதசார் நிலையங்கள், அயலவர்கள், வெகுசன தொடர்பூடகங்கள், அரசாங்கம், நாட்டின் சூழல் போன்ற காரணிகள் எவ்வாறு முக்கிய பங்கினை வகிக்கிறது என்பது பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது.

தொடர்ந்து இப்பயிற்சி வகுப்பு மாதத்தின் இரு நாட்களாக 4 மாதங்களுக்கு நடைபெறும். அவ்வகுப்புக்களில் இடம்பெறும் விடயங்கள் பின்வருமாறு,

- ஏன் திருமணம் செய்ய வேண்டும்
- குழந்தை பிறப்பு - ஆணா? பெண்ணா?
- தீர்மானிப்பது யார்?
- பிள்ளை அபிவிருத்தி என்றால் என்ன?
- பிள்ளையின் வளர்ச்சிப் படிகள்
- பிரசவத்திற்கு முன்பு
- பிரசவ நேரம்
- பிரசவத்திற்கு பின்பு

**தகவல் – தர்சினி**
**"யாத்ரா குழு"**

## ஆடவரே கேளீர்

*திருமணச் சந்தையிலே தினம் தினம்*
*விலை போகின்றோம் நாம்*

*அறிவை அழகை அன்பை பார்த்த நாம்*
*ஆயிரத்திற்கும் இலட்சத்திற்கும்*
*அடிமையானது ஏன் ?*

*நாம் எதிர்பார்க்கும் ஒவ்வொரு ரூபாயிலும்*
*எம் கையாலாகாத்தனம் தானே*
*வெளிச்சமாகிறது.*

*சிந்தித்துப் பார்ப்போம்!*

*பணம் இல்லாததால் கண்ணீரில் கரையும்*
*மங்கயரின் எதிர்காலம் என்ன?*

*அன்புக்குத்தானே விலை பேசுகின்றோம்*
*எத்தனை ரூபாய்க்காக*
*நாம் அடிமையாகின்றோம்.*

*ஆண் சமூகம்*
*அநியாயமாய் - அறிந்தும்*
*அடிமையாகிறதே.*

*சகோதரர்களே ஏன் இந்நிலை*
*வேண்டாம் எமக்கினி*
*சீ(தனம்) சீதனம்*
*என - இன்றே முடிவு செய்வோமா?*

**ஆக்கம் :- ஆர். உதயன்**
**வெண்புறா இளைஞர் கழகம்**
**கரடியனாறு.**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கல்வி விழிப்புணர்வூட்டல் கருத்தரங்கு

நாவற்குடா உழைக்கும் மாதர் சங்கம் நாவற்குடாவில் உள்ள பெண்கள், சிறுவர்கள் பிரச்சினைகளை இனம் கண்டு அதனைத் தீர்த்து வைப்பதற்காகவும், கிராமத்தில் இனங்காணப்படும் அடிப்படைப்பிரச்சனைகளை உரிய மட்டத்துடன் தொடர்பு கொண்டு தீர்த்து வைப்பதை நோக்காகக்கொண்டும் செயற்பட்டு வருகின்றது.

அந்தவகையில் அண்மையில் இச் சங்கம் கிராமத்தில் இனம்கண்ட முக்கிய பிரச்சினையாக இருந்தது, பாடசாலை செல்லும் வயதில் அனேக பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு உதவியாக வீட்டு வேலை, வெளி வேலையில் ஈடுபடுவதற்கும், தங்களுக்கு இளைய சகோதரங்களை கவனிததுக் கொள்வதற்காகவும் பாடசாலை செல்லாமல் வீட்டில் நிற்கின்றனர். எனவே சிறுவர் கல்வியின் அவசியத்தையும், பெற்றோரும், சமூகமும் அதற்கு பொறுப்பேற்க வேண்டிய கட்டாயத்தையும் அனைவருக்கும் உணர்த்த வேண்டிய தேவை உள்ளதை அவதானித்தார்கள் இச் சங்க அங்கத்தவர்கள்.

இதற்காக 2002-09-29ம் திகதியன்று மட்/மஞ்சந்தொடுவாய் சாரதா வித்தியாலயத்தில் "கல்வி விழிப்புணர்வூட்டல் கருத்தரங்கொன்று சங்க செயலாளர் கி. கலாவதி தலைமையில் நடத்தப்பட்டது. கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியை சித்திர லேகா மௌனகுரு அவர்களால் அனுப்பி வைக்கப்பட்டிருந்த வாழ்த்துரை வாசிப்புடன் ஆரம்பிக்கப்பட்ட இக் கருத்தரங்கில் சமூகப் பணி



டிப்ளோமா பாடநெறி மாணவன் திரு.மூ. உதயகுமாரன், சமூக சேவை உத்தியோகத்தரும் களப்பணி ஆலோசகருமான திரு. எம். கோணேஸ்வரன், கல்வி அபிவிருத்திச் சங்க உபதலைவர் திரு கமலதாஸ், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் தி. எஸ். சிவகுமார், மட்/சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. நிர்மலா ஜெயராஜா, மட்/ சாரதா வித்தியாலய அதிபர், இந்து ஆலயங்கள் ஒன்றியத் தலைவர் திரு. எஸ்.வைரமுத்து, கிழக்குப் பல்கலைக்கழக மாணவியும், நாவற்குடா உழைக்கும் மாதர் சங்க அங்கத்தவருமான கி. கலைமகள் ஆகியோர் உரையாற்றினர்.

இறுதியாக சங்கத் தலைவர் க. நர்மதா அவர்களின் நன்றியுரையுடன் இக் கருத்தரங்கு நிறைவுற்றது.

ஆசிரியர்
பெண்கள் செய்தி மடல்
சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

அன்புடையீர்,

**செய்தி மடலுக்கான கோரிக்கை**

தங்கள் அமைப்பின் செய்தி மடல்(3:2) ஒன்று கண்டேன். அரிய பல விடயங்கள் அதில் உள்ளன.

தங்கள் அமைப்புப் பற்றியும் பெண்களோடு தொடர்புடைய ஏனைய பல விடயங்களையும் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.



எனவே தங்கள் அமைப்பினால் வெளியிடப்படும் செய்தி மடலை எனக்குத் தொடராக அனுப்பி உதவுமாறு தங்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். அத்துடன் பழைய இதழ்களும் கைவசம் இருப்பின் அனுப்பி வைத்தால் மிகவும் பிரயோசனம் உடையதாக இருக்கும்

*முகுசீன் றயீசுத்தீன்*

**விதை விதைத்து**
**மரம்வளர்த்து**
**நிழலில் குளிர்ந்து**
**மலர்களை முகர்ந்து**
**காய்களை ரசித்து**
**கனிகளை சுவைத்து**
**அகமும் புறமும்**
**மகிழ்ந்தோம்**
**வேர்களைக் காண**
**மறந்தோம்**
**வலிமை காக்கவும் தான்**
**நெடுமரம் சாய்ந்து**
**வீழ்ந்தபின்**
**யோசிக்கின்றோம்**
**(காய்ந்து, ஓய்ந்து சாய்ந்த**
**உயர்ந்த மரம்)**
**பெண்ணும் எம்**
**மண்ணில்**
**இப்படித்தான்**

**நன்றி**
**"தாமரை"**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முதற் பிறை

பெண்பற்றிய கட்டமைப்புக்களும், வரைவிலக்கணங்களும், செல்வாக்குச் செலுத்திய நமது சமூகத்தின் முடிச்சுக்கள் மெல்ல மெல்ல அவிழும் காலமிது. நினைப்பது கூடப்பாவம் என்று எண்ணிப் பயந்த, பெண்களுக்குள் எழுந்த கேள்விகளே இன்று இந்த முடிச்சுக்கள் அவிழ காரணமாயின. இப்பெண்களின் எண்ணங்கள், வாய்மொழிப் பாடல்களாக, கதைகளாக, பழமொழிகளாக - காது வழியாக காவப்பட்டு வாழ்ந்து வந்தன. இவை மறைந்து விடாமல் பேணப்பட வேண்டுமென்பதற்காக பின்னர் எழுத்து வடிவம் பெற்றன. பெண்கள் பலர் எழுதத் தொடங்கினாலும் அறிமுகமற்ற திறமையுள்ள அனேக பெண்களுக்கு கால் பதிக்க களம் கிடைப்பதில்லை. அக்குறைபாட்டை நீக்கும் நோக்குடன் எமது செய்திமடலில் இப்பகுதியை தருகின்றோம்.

## சமூகப் பார்வையில் ஒரு பெண்



ஒரு தனிமனிதத்தின் வளர்ச்சியில்தான் ஒரு சமூக வளர்ச்சி தங்கியுள்ளது. ஒரு சமூகம் சகல துறைகளிலும் வளர்ச்சியடையும் போதுதான் முழு சமுதாயமே வளம் பெறுகின்றது. தனி மனித(ம்)ன் எனும் போது அதில் ஆண், பெண் இருபாலாரும் ஒரு அங்கமே. ஆனால் இன்று நம் சமூகமோ ஆண், பெண் என்பதை இருவேறு கண்களால் நோக்குவதுதான் ஏனோ?

ஒரு பெண் வளர்ந்துவிட்டால் அவளுக்குள்ளும் சில ஆசைகள், கொள்கைகள் வளர்த்துக்கொள்கிறார்கள். தானும் ஒரு ஆசிரியராக, வைத்தியராக அல்லது ஏதோ ஒரு வகையில் தானும் உருப்பெற்று தன் சமூக வளர்ச்சியில் தானும் ஒரு பங்களிப்புச் செய்ய வேண்டும் என்றெல்லாம் கனவு காண்கின்றாள். ஆனால் நம் சமூகமோ அம்மாடியோ! நீ பெண்பிள்ளை நீ ஒரு வைத்தியராகவோ அல்லது தாதியாகவோ வந்தால் பல ஆடவர்களை சந்திக்க வேண்டியும், தொட்டு வைத்தியம் பார்க்க வேண்டியும் வரும். அது நம் கலாசாரத்திற்குப் பொருந்தாது. எனவே நீ வீட்டோடு இருந்துவிடு. கணவனுக்குத் தொண்டு செய்தலும் வீட்டில் இருப்பதும்தான் நம் மார்க்க சட்டம் என்கின்றனர். ஆனால் இறுதியில் நடப்பதோ அந்தப் பெண்ணைத் தொட்டு வைத்தியம் பார்ப்பதோ ஒரு அந்நிய ஆண்தான். ஏன் இந்த அவலநிலை?

ஒரு பிரதேசத்தில் ஒரு தாதியை அல்லது வைத்தியரை உருவாக்குவது பபுளு கிபாயர என்றால் அதில் ஆண், பெண் இருபாலாரும் உள்ளடக்கப்படுகின்றனர். ஒரு வீட்டைக் கட்டுவதில் ஆண் ஒரு செங்கல் என்றால், பெண் சாந்துக்கலவை. ஒரு ஆணுக்கு மட்டுமே பல்கலைக்கழகம் செல்லமுடியும் என்றால், ஒரு ஆணால் ஒரு சமூகத்தை, எழுச்சி பெறச் செய்ய முடியுமென்றால், ஏன் ஒரு பெண்ணால், முடியாது? ஏன் நபி பெருமானார் (ஸல்) அவர்கள் கூட "இத்தா" இருந்த ஒரு பெண்மணிக்கு வேறு கதியில்லாத போது அவளை வெளிச்சென்று தனக்குரியதைப் பெற்றுக்கொள்ள அனுமதித்தார்களே. அப்படி இருக்க நாம் ஏன் உற்சாகமளிக்க வேண்டிய பெண் சமுதாயத்தை தடை போடுகிறோம்?

**எம்.எஸ். நுஸ்ரத் நஸ்வின்**

## துரதிஷ்டவசமான

பெண்களுக்கு இனிமேலும்
வன்முறைகள் வேண்டாமென்று
வாய் திறந்து மூடு முன்பே
ஆணாதிக்கத்தை எதிர்ப்பதாக
மழையைக் கண்ட
தவளைகள் போன்று
மாக் . . . மாக் என்கிறீர்கள்
பட்டப் பகலிலும்
நட்ட நடு வீதிகளிலும்
சந்து பொந்துகளிலும்
பலவீனமான பச்சோந்திகள்
பலாத்காரம் புரிகிறார்கள்
பெண்கள் என்றால் வெறும்
பிரேதம் என்று பிதற்றிக்கொண்டு
மாமிசப் புலயர்களாக மாறி
பேயாட்டம் போடுறீர்கள்,
பிராண்டி பீதியூட்டுகிறீர்கள்.
பால்ய பராயம் தொடக்கம்
பட்ட துன்பம் ஏராளம்
பெண் என்ற பெயரால்
என் உடம்பில் ரணங்கள்
ஏராளம் . . . ஏராளம் . . .
அச்சமின்றி வாழ்வதற்கு
அருகதையே இல்லை இங்கு
அனுதினமும் அச்சுறுத்தல்
ஆணாதிக்க சமூகத்தில்
பெண்கள் என்றால் அச்சுறுத்தல்
வீட்டுக்குள்ளும் அச்சுறுத்தல்
வீதிகளிலும் அச்சுறுத்தல்

**தில்லை**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிரேரிக்கப்பட்ட சார்க் சமூக சாசனம்

## பயிற்சி பட்டறை

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அனுசரணையுடன் "மாகா நிறுவனம்" பிரேரிக்கப்பட்ட சார்க் சமூக சாசனம்" எனும் தலைப்பில் தொழிற்பட்டறை ஒன்றினை 28-09-2002 அன்று மட்/லேக்-வியூ-இன், இல் நடத்தியது. இந் நிகழ்வில் பின்வரும் தலைப்புக்களில் கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

1. வறுமையை முற்றாக ஒழித்தல்.
2. சிறுவர்களின் பாதுகாப்பு
3. இளைஞர்களின் அபிவிருத்தி
4. மகளிருடைய அதிகாரமளிப்பு.

இத்துடன், தற்போது எமது பிரதேசத்தில் காணப் படும் வேறு பல முக்கிய விடயங்களையும் ஆராய்ந்து, அதுபற்றி கலந்துரையாடி இத் தலைப்புக்களுடன், சார்க் பிராந்தியத்திற்கான சமூக சாசன அறிக்கையில் சேர்த்துக் கொள்வதற்காக இப் பட்டறை ஒழுங்கு செய் யப்பட்டிருந்தது. இப் பட்டறையில் சூரியா கலாசாரக் குழுச் செயற்பாட்டாளர்கள் விஜிகலா, ஜெஸ்மின் ஆகியோ ரும் கலந்துகொண்டனர்.



தம் எண்ணத்திற்கு புறம்பாக முன்வைக்கப்படும் சிலரின் கருத்துக்கள் கலந்து கொள்வோர் சிந்தனையை கிளறி விடுவதுண்டு. அந்த வகையில் அன்று "மகளிரு டைய அதிகாரமளிப்பு" எனும் தலைப்பில் அமைந்த குழு வில் இருந்த சகோதரி விஜிகலா தன் சிந்தனையை பின்வரும் கவிதையாக முன்வைக்கிறார்.

### மௌனத்தின் பதில்கள்

அன்று நான்........
உணர்வுகளெல்லாம் மரத்துப்போன
மரக்கட்டையாய்..........
உனக்கல்லடி உபதேசம் ஊருக்குத்தான்
என்பதுபோல் எல்லாமே......
தற்காலிகமாய் என் வாய்க்கு அன்று நான் பூட்டுக்
களைப் போட்டுக் கொண்டேன்.
வந்தவர்களில் அரைப்பகுதியினன் கற்றவர்கள்.
ஆங்கிலத்தையும் துறைசார் கல்வியையும். பெண்
ணினத்தின் கண்ணீர்த்துளிகளின் காரணத்தை
என்னுடன் சேர்த்து.......
இன்னும் சிலர் கருத்தாய் வெளியிட்டனர்.
அப்பப்பா அதற்குப்பின் நடந்ததை
என்னால் நினைத்துக்கூடப் பார்க்கமுடியவில்லை.
வாய் திறக்கும்முன்பே
வாயைத் திறக்கவே விடவில்லை.
பெண்களுக்கு என்ன சம உரிமை வேண்டும்?
பெண்களுக்கு இப்போ என்ன பிரச்சினை?
இப்படியே சொல்லி-நாங்கள்
சொல்ல வந்த கருத்தை
சொல்லாமலே விடவைத்தார்கள்
அப்போது நான் புரிந்தேன்
இப்படியும் சமூகம் இருக்கிறது என்று.
அடிபட்டவருக்குத்தான் தெரியும்
அதன் வேதனை.
உனக்கு வலிக்கவில்லை என்று
வேறொருவர் சொல்வது நியாயமா?
கேள்விக்குப் பதில் சொல்வது
புத்திசாலித் தனம்
விதண்டாவாதக் கேள்விக்குப் பதில் சொல்வது -
முட்டாள் தனம் - அன்று நான்
என் வாய்க்கு பூட்டுப்போடாமல் இருந்திருந்தால்
முட்டாளாகியிருப்பேன்
குழப்பியவர் நினைத்திருக்கலாம்
நாங்கள் குழம்பிவிட்டோமென்று
அப்போது எங்களுக்குள் வந்த தெளிவை
உணர்ந்திருக்கமாட்டார்கள்
குழப்புவதற்கென்று சமூகம் இருக்கும்போது
குழம்பிய சமூகத்திற்கு - எங்கே
தீர்வு கிடைக்கப்போகின்றது..........?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பழஞ்சோறு மூக்கைப் பழிக்குதாம்
# பழமொழி பெண்ணைப் பழிக்குதாம்

எமது கலாசார கட்டமைப்புக்களிலும், புராண, இதிகக் கதைகளிலும் பெண்களுக்காக சில புள்ளிகள் வைத்து, கோடுகள் வரைந்து அதை அழகிய கோலமெனக் கூறி அந்த வரையறைக்குள்ளே பெண்கள் வாழ வேண்டும் என சட்டம் வகுத்தவர்கள், மேலும் பெண்களை உம்தர நிலைக்கு இட்டுச் செல்லும் பொய்யான கருத்துக்களை பழமொழிகளாக்கி உலாவ விட்டனர்.

உண்மைக்குப் புறம்பான கருத்துக்களைக் கூறும் பெண் பற்றிய பழமொழிகளுக்கு, படங்கள் வரைந்து வெளியிட்ட, முஸ்லிம் பெண்கள் ஆராய்சி, செயற்பாட்டு முன்னணி நிலையத்தினரின் "கட்டவிழும் முடிச்சுக்கள்" பெண்கள் தொடர்பான பொய்மைகளும் உண்மைகளும் என்ற நூலில் இருந்து சில படங்களைத் தருகின்றோம்.

ஆசிரியை



அடுப்பு ஊதும் பெண்ணுக்கு படிப்பெதற்கு



ஆண்கள் இதயத்தால் சிரிப்பார்கள் பெண்கள் உதட்டால் சிரிப்பார்கள்





ஆள்வதும் பெண்ணால் அழிவதும் பெண்ணால்



பெண்ணுக்கு மூளை கரண்டியளவு





பெட்டைக்கோழி கூவி பொழுது விடியாது



கோடி ஒரு வெள்ளைக்கு குமரி ஒரு பிள்ளைக்கு



சீறும் பாம்பை நம்பலாம் சிரிக்கும் பெண்ணை நம்பாதே



பிணக்குகள் எல்லாம் பெண்களால் தான்

நன்றி
"கட்டவிழும் முடிச்சுக்கள்"

www.tamilarangam.net

# சூரியா நூலகம்



பலகாலமாய் பல வழிகளிலும் சிறுமைப்படுத்தப்பட்டு வந்த பெண்களை அறிவு ரீதியிலும் மேம்படுத்தி அவர்கள் சார் உண்மைகளை அனைவரும் உணரச் செய்ய வேண்டும் என்பதை நோக்காகக்கொண்டு செயற்படும் எமது நூலகம் காலத்திற்கு காலம் பலரும் பயன்படும் வண்ணம் புதிய புதிய நூல்களைத்தருவித்து தன்னைப் புதுப்பித்துக் கொள்கின்றது

சூரியா நிலையத்தில் ஓர் நூலகம் இருப்பது யாவரும் அறிந்ததே. இங்கு பெரும்பாலும் பெண்கள் தொடர்பானவையும், பெண்கள் எழுதிய நாவல்களும், சிறுகதைத் தொகுப்புகள், கவிதைத் தொகுதிகள், சமகால தகவல்களைக்கொண்ட பிரசுரங்கள், பெண்கள் தொடர்பான விபரண வீடியோ படங்கள், ஒலிப்பதிவு நாடாக்கள், மற்றும் சமூக விஞ்ஞானம் தொடர்பான நூல்களும் உள்ளன.

இவைதவிர தமிழ் ஆங்கில தினசரி பத்திரிகைகளையும் நூல் நிலையம் தருவிக்கிறது. இந் நிலையம் வியாழன், வெள்ளி, பூரணை தினம் தவிர்ந்த ஏனைய வார நாட்களில் மு.ப. 9.00 மணியில் இருந்து பி.ப. 5.00 மணிவரையும் திறந்திருக்கும். அத்துடன் சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 9.00 மணியிலிருந்து பி.ப 5.00 மணிவரையும் திறந்திருக்கும். நூலகத்தைப் பயன்படுத்துவதற்கு கட்டணங்கள் ஏதுமில்லை.

*பெண்ணென்று எண்ணிவிடாதே - உன்னால்*<br>
*பெருமைகள் பலவுண்டு முடங்கிவிடாதே*<br>
*கல்வியை துறைபோகக் கற்றால் - நாமும்*<br>
*கலங்காமல் நாளுமே வாழ்ந்திட முடியும்*

*குட்டக் குட்டக் குனிஞ்சி நின்னா*<br>
*குட்டுறவன் ஓய மாட்டான்*<br>
*கையிருக்கு பலமிருக்கு*<br>
*பொண்ணு என்ன ஜடமா?*

*சக்தி மிக்க குலமே- அது*<br>
*ஒண்ணா சேர்ந்தா பலமே*

*கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டு நாம*<br>
*வாழ்ந்த வாழ்க்கை ஏதும் இல்லை*<br>
*மிஞ்சுகின்ற காலமிது*<br>
*பெண்கள் எண்ணம் என்ன?*

*பெண் உரிமை தன்னை பெண்கள்*<br>
*பிரகடனம் செய்ய வேண்டும்*

*அஞ்சிவாழத் தேவை இல்லை*<br>
*அதற்கு வழி என்ன?*

*பெண்கள் ஒன்று கூடு*<br>
*பெரும் குரலில் பாடு*

*ஒடுக்கும் சகல விலங்கும் உடைத்து*<br>
*உலகை அடிமைப் பிடியில் இருந்து*<br>
*விடுக்கும் பணியில் பெண்கள் எல்லாம்*<br>
*விழிப்புக் கொண்டு எழுக*

*கரங்கள் சேர்த்துக்கொள்க - பெண்கள்*<br>
*உரங்கொள் நெஞ்சோடு எழுக.*

*பெண்களின்குரல் (ஒலிநாடா)*<br>
*சூரியா*

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்**<br>
**இல.20, டயஸ் வீதி,**<br>
**மட்டக்களப்பு.**

**தொ.பேசி-23297**

முகவரி:- ..........................................................

..........................................................

..........................................................

..........................................................

ISSN.1391-6130

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்